திரு. ப. பொன்னுரங்கம் : நடந்திருக்கிறது, செய்தவனே நான், திரு அரங்கண்ணல் செய்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : வீட்டு வசதி வாரியத்திலிருந்து கட்டப்படுகிற குடியிருப்புகளாக இருந்தால் வாடகைக்கு இருப்பதை சொந்தமாக்கி விடலாம். ஆனால் அரசாங்கப் பணத்திலேயிருந்து அரசாங்க ஊழியர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் இவை. அரசாங்கப் பணத்திலிருந்து அரசாங்க ஊழியர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளை மாற்றுவது என்பது இயலாத நிலையில் இருக்கிறது.

மறைமலை நகரில் குடியிருப்போரிடமிருந்து வசூலிக்கப்படும் தொகை

301—(*வினா எண். 21650)—திரு. எஸ். ஜகத்ரட்சகன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கருகில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய நகரமான மறைமலை நகரில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களிடம் பராமரிப்புக்காக மாதம் ரூ. 20 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வித பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இந்த பராமரிப்புத் தொகையைக் கொண்டு கீழ்க்கண்ட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) தெரு விளக்கு வசதிகள்.
(2) சாலைகள் பராமரிப்பு.
(3) குப்பை கூளங்கள் அகற்றுதல்.
(4) கழிவு நீர் அகற்றுதல்.

திருச்சி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

302—(*வினா எண். 22337)—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1984 மார்ச் 13]

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ)ஆம்.

(ஆ) திருச்சி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் நிர்வாகக் குழு தமிழ்நாடு கூட்டுறவு சட்டங்களுக்கும், விதிகளுக்கும், மற்றும் சங்கத்தின் துணை விதிகளுக்கும் புறம்பாக செயல்பட்டதால் மேற்படி சங்கத்தின் நிர்வாகக்குழு வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களால் கலைக்கப்பட்டு கூட்டுறவு சார்பதிவாளர் ஒருவர் தனி அலுவலராக நியமிக்கப்பட்டார். தனி அலுவலர் மேற்படி சங்கத்தில் 4-12-1982 அன்று பணியேற்றார். மேற்படி சங்கத்தின் முன்னாள் தலைவர் உயர் நீதிமன்றத்தில் கூட்டுறவு பதிவாளர் உத்தரவையும், தனி அலுவலர் மேற்படி சங்கத்தின் பணியேற்றத்தையும் நிறுத்தி வைக்கும்படி மேல் முறையீடு வழக்கு கொடுத்துள்ளார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் குழு, தனி அலுவலர், சங்கத் தலைவரின் கீழ் பணிபுரிய வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. மேற்படி ஆணையானது தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 72-ன் கீழ் தனி அலுவலர் நியமனம் செய்யும் நோக்கத்தையே பாதிப்பதாக உள்ளதாலும், வழக்கு இன்னும் முடியாத நிலையில் உள்ளதாலும், அரசு மாநில அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களை இந்த வழக்கில் வாதாட ஆணையிட்டுள்ளது. வழக்கு இன்னும் முடியவில்லை.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் என்று நியமிக்கிறபோது அவர்கள் தலைவருக்கு கீழே பணியாற்றுகின்ற சூழ்நிலை உருவாகி இருப்பது எந்த வகையில் சரியானதாக இருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த சங்கத்தின் இயக்குநர்கள் யார் யார் இருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த செல்வாக்கு படைத்தவர்கள், எதையும் செய்யும் வல்லமை படைத்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கிறவர்கள் எந்த அளவுக்கு அதிலே இந்த முறைகேடுகளுக்கு ஈடுபட்டு இருப்பார்கள், எவ்வளவு தொகை இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ? இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய விவரங்கள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எவ்வளவு செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தாலும் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அரசைப் பொறுத்த வரையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை என்று சொல்லுகிற வகையில் இன்றைக்கு அந்த சங்கத்தில் இருக்கிற நிர்வாகக் குழு மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதில் 9.48 இலட்சம் சங்கத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகளால் இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த இழப்புக்குரிய காரணத்திற்கு யாராக இருந்தாலும் அவர்களை கண்டுபிடித்து,

அவர்கள் எவ்வளவு பெரிய செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும் நிச்சயமாக அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்து கொள்ள விரும்புவது அதில் இருக்கும் நிர்வாக இயக்குநர்கள் யார் யார்? அவர்கள் சாதாரண சாமான்ய மானவர்களாக இல்லாமல் மிகுந்த செல்வாக்கு உள்ள காரணத்தினால் அது துறை விசாரணையாக இருந்தாலும் நீதி மன்ற விசாரணையாக இருந்தாலும் அவர்கள் உள்ளே புகுந்து வெளியே வந்து விடுகிற நிலைமை இருக்கிறது. இதையும் மீறி அரசு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே இப்போது கஸ்தூரிரங்கன் என்பவர் தலைவராக இருக்கிறார். மற்றும் 5 பேர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட செல்வாக்கு உள்ளவர்களாக இருந்தாலும, எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி தருகிறேன்.

கொல்லிமலைப் பகுதி மலைவாழ் மக்களுக்குக் கதர் வாரியத்தின் மூலம் வழங்கப்படும் கடன்கள்

303—(*வினா எண். 21746)—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலைப் பகுதியில் மலைவாழ் மக்களுக்காகக் கதர் வாரியத்தின் மூலம் என்னென்ன கடன்கள் வழங்கப்படுகின்றன ?

(ஆ) கடன் வழங்குவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழும் மற்றும் தமிழ்நாடு அரசின் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் கடன் உதவியும் மானிய உதவியும் வழங்கப்படுகின்றது.

(ஆ) வாரியம் தனிப்பட்ட நபர்களுக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் (Agreed Programm) கடன் வழங்குகிறது. இதன் பொருட்டு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலித்து கடன் பத்திரம் பதிவு செய்ய வேண்டியுள்ளது.